ஆட்சியரின் பரிசீலனையிலுள்ளது. மற்றக் கிராமங்களைப் பொறுத்த மட்டில் பிரிவு 4 (1)-ன் கீழ் நிலத்தைக் கையகப்படுத்தும் செயற் குறிப்புகள் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையிலுள்ளன.

அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்

*709 **வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த புதிய திட்டம் ஏதேனும் வகுத்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அனுப்பப்பட்டது, தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 1964-ஆம் ஆண்டிலிருந்து மத்திய சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. சமீபத்தில் 3-2-1972-லும் கடிதம் வரையப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த வீடு கட்டும் திட்டத்திற்காக 1964-ஆம் ஆண்டிலிருந்து தொடர்பு கொள்ளுவதாக சொல்லப்படுகிறது ? ஏன் அதற்கு இவ்வளவு காலதாமதம் ஆகிறது ? இதைத் துரிதமாகச் செய்ய மாநில அரசு மத்திய சர்க்காரிடம் கேட்க விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, இது மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு இருக்கும் திட்டம் அல்ல. மத்திய அரசே மாநில அரசிடத்தில், இந்த 1,000 ரூபாய் திட்டத்தில் கட்டப்படுகிறதே அதற்குப் பதிலாக இன்னும் அதிக அளவில் கட்டடைப் டிசைன் போட்டு கட்டப்படக் கூடாதா என்ற கேள்வியை எழுப்பினார்கள். 2,680 ரூபாய் 2,850 ரூபாய் என்ற இரண்டு திட்டங்களை வரைந்தெடுத்து மத்திய அரசுக்கு அனுப்பினோம். அப்பொழுது 50 சத விகிதம் மானியம் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டோம். அதற்கு ஒத்துக் கொண்டார்கள். பிறகு அந்த வீடும் போதாது, 5,000 ரூபாய் வரையிலுள்ள திட்டத்தை 1970 மே மாதத்தில் கேட்டார்கள். அதற்கும், 5,000 ரூபாயில் வீடு கட்டும் திட்டத்தைப் போட்டு அனுப்பி, அது முழுவதையும் மானியமாக மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். அதற்கு முழு மானியம் கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு இந்தத் திட்டம் ஒத்துக்கொள்ளப்பட்டதாகப் பதில் வரவில்லை. கடந்த மாதம் கூட நினைவுபடுத்திக் கடிதம் எழுதியிருக்கிறோம்.

1972 மார்ச் 25]

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மத்திய சர்க்காருக்கு இந்தத் திட்டம் அனுப்பப்பட்டு, இன்னும் ஒப்புதல் வரவில்லை என்று கூறினார்கள். ஆகவே, மாநில மட்டத்திலாவது இதற்காகத் தனி வாரியம் அமைத்து எல்.ஐ.சி. அல்லது மற்ற பேங்குகள் மூலமாகக் கடன் பெற்றுக் கடன் முறையிலே அளித்து வீடு கட்ட வீடில்லாத அத்தனை அரிசன மக்களுக்கும் கடன் உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : திருப்பி கடனைக் கொடுப்பவர்களுக்குத்தான் எல்.ஐ.சி.யின் மூலம் கடன் பெற்று, அந்த விதத்தில் ஒரு கழகத்தைத் தமிழ் நாடு வீட்டு வாரியக் கழகம் என்று நிறுவியிருக்கிறோம் என்று இரண்டு தினங்களுக்கு முன்பு நடந்த அரிசன நல மானியக் கோரிக்கை விவாதத்தின்போது விவரமாகக் கூறியிருக்கிறேன். அது கடனைத் திருப்பித் தருபவர்களுக்கான திட்டம். ஆனால், கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாமல், மிகவும் ஏழையாக இருப்பவர்களுக்காக 940 ரூபாயாக இருந்த இந்தத் திட்டத்தை மாற்றி, 1,500 ரூபாயாக ஆக்கி வீடுகள் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை இந்த ஆண்டிலே உருவாக்கியிருக்கிறோம். ஆறு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

திரு. கோ. செபமாலை : தலைவரவர்களே, இந்த 1,500 ரூபாய் கொடுக்கும் மானியத்திற்கு அரிசனங்கள் முதலிலே 250 ரூபாய் கட்டினால் தான் கிடைக்கும் என்று இருக்கிறதே, அப்படியில்லாமல் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 250 ரூபாய் கட்டினால் தான் கொடுக்க வேண்டும் என்று இல்லை. 250 ரூபாய்க்கு அவர்கள் பணமாகவோ, அல்லது உடல் உழைப்பாகவோ கொடுக்க வேண்டுமென்ற திட்டமிருக்கிறது. சிலர் 250 ரூபாயைக் கூட ஐந்து ரூபாய் தவணை வீதத்திலும் கொடுக்கிறார்கள். சிலர் உடலுழைப்புத் தருகிறார்கள். சிலர் சாமான்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள். எனவே, கட்டாயமாக 250 ரூபாய் கொடுத்தால்தான் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நிலைமை இல்லை.

இராணிப்பேட்டைக்கு அரிசன தோல் பதனிடுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

***710 வினு.—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

இராணிப்பேட்டையில் அரிசன தோல் பதனிடுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இராணிப்பேட்டை வட்டாரத்திலே அரிசன மக்கள்தான் அதிகமாக இந்தத் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏழைகளாக இருப்பதால்